Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# யாழ்ப்பாணம் சின்னத்தம்பிப் புலவரின் பஞ்சவன்னத் தூதுப் பாடல்கள் புலப்படுத்தும் சிற்பம் மற்றும் இசைச் செய்திகள்

**கிருபாசக்தி கருணா & முனைவர்.N. சாரதா.**
kirupasakthy@univ.jfn.ac.lk

50

**ஆய்வு நோக்கம்**

ஈழத்துச் சிற்றிலக்கிய வரலாற்றில் யாழ்ப்பாணம் இணுவிலூரைச் சேர்ந்த சின்னத்தம்பிப் புலவரின் பஞ்சவன்னத் தூதுப் பாடல்கள் முக்கியம் பெறுகின்றன. இதன் பாட்டுடைத் தலைவன் யாழ்ப்பாண அரசர் காலத்தில் இணுவில் பகுதிக்குப் பொறுப்பான அரசனாக விளங்கிய காலிங்கராஜனின் மகன் கைலாயநாதன் ஆவார். தந்தைக்குப் பின்னர் அரசனாக விளங்கிய கைலாயநாதனது வரலாறு, வீரம், கொடை, விருந்தோம்பல், ஆட்சித்திறன் ஆகியன பற்றி இத் தூதுப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. மக்கள், கைலாயநாதனை மனிதப் பிறவியாகக் கொள்ளாது கடவுளாகக் கருதி வழிபட்டமை பாடல்கள் தரும் செய்தி. வீரவழிபாடு, அருள் வழிபாடு இரண்டும் இணைந்த இவ்வழிபாட்டுமுறை தமிழகத்தின் மிகப் பழமையான நடுகல் வழிபாட்டு மரபை ஈழத்திலே தோற்றுவித்த பெருமையைப் பெறுகின்றது. ஆயினும், இவ் இலக்கியப் பாடல்களைப் பாடும் போது வழமையான இந்துசமயக் கடவுளரின் சிற்பங்களைக் கண்முன்னே நிறுத்துகின்றது என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவ்ஆய்விற்கு மூலமாக, தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி அவர்களால் தொகுக்கப்பட்ட இணுவை சின்னத்தம்பிப்புலவர் அருளிய 'பஞ்சவன்னத்தூது' நூல் எடுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர். டாக்டர். மு.வரதராசன் தனது “தமிழ் இலக்கிய வரலாறு” எனும் நூலில் வெளிநாட்டுத் தமிழ் இலக்கியம் என்ற அத்தியாயத்தில் இப்புலவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இத்தகு சிறப்பு வாய்ந்த புலவரின் இத் தூதுநூலிலுள்ள கடவுளர்களுடன் தொடர்புடைய சிற்பக் குறிப்புக்களையும் இசைச் செய்திகளையும் பற்றி நோக்குதல் இவ் ஆய்வின் நோக்கமாகும். மேலும் இவ் ஆய்வானது விடய ஆய்வு முறையை பின்பற்றியதாக மேற்கொள்ளப்படுகிறது.

**திறவுச் சொற்கள்**: சிற்றிலக்கியம், தூதுப்பாடலகள், சிற்பம், வழிபாடு, இசை

**ஆய்வுச்சுருக்கம்**

பதினெட்டாம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலப் பகுதியில் வாழ்ந்த இணுவை சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய நூல்களில் பஞ்சவன்னத்தூது, சிவகாமியம்மை பதிகம், சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ், நொண்டி நாடகம், கோவலன் நாடகம், அநிருத்த நாடகம் ஆகியன அச்சுப்பதிப்பு வடிவில் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றுள் பஞ்சவன்னத்தூது, கைலாயநாதன் பஞ்சவன்னத்தூது, இளந்தாரி பஞ்சவன்னத்தூது ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இளந்தாரி என்பது துடிப்புள்ள இளைஞரைக் குறிக்கும். கைலாயநாதனும் துடிப்புள்ளவர், பண்புள்ளவர். எனவே 'இளந்தாரி' என்று அவர் அழைக்கப்பட்டதில் வியப்பில்லை. பாட்டுடைத்தலைவனாகிய கைலாயநாதன் வீதி வலம் வரும் போது கண்ட சந்திரமோகினி அவரிடம்

பேரன்பு கொண்டதன் காரணமாக அன்னம், கிளி, நிலா, தென்றல், தோழி ஆகியவற்றைத் தூதாக அனுப்பியதன் பொருட்டு இது பஞ்சவன்னத்தூது ஆயிற்று.

> “இளந்தாரி, தாம் இவ்வுலகு நீத்தலை முன்பே குறிப்பாக உணர்த்தியிருந்தார் எனவும், ஒருநாள் ஒரு புளியமரத்தின் வழியே உருக்கரந்து விண்ணுலகு சென்றார் எனவும், அதனை அறிந்த மக்கள் அனைவரும் அங்கு அவரைத் துதித்தனர் எனவும், அப்போது இளந்தாரி அவர்கள் முன் தோன்றித் தம்மை வழிபடும் முறையைத் தெரிவித்து அவர்களை எப்பொழுதும் காப்பாற்றி அருள்புரிவதாகக் கூறினார் எனவும், அன்றுமுதல் இவ்வழிபாடு அங்கு நிகழ்ந்து வருகிறது எனவும் செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன.”

இந்நிகழ்வு, இளந்தாரி உருக்கரந்த இடத்திலேயே இளந்தாரி வழிபாட்டிற்கு வழிசமைத்தது.

**பஞ்சவன்னத் தூதுப் பாடல்கள்:**

இவ் இலக்கியத்தில் மொத்தம் நாற்பத்திநான்கு பாடல்கள் உள்ளன. அவற்றுள் தூது நூலின் மூலம், கைலாயநாதர் மெய்க்கீர்த்தி அகவல், இளந்தாரி துதி ஆகியன அடங்குகின்றன. கதைக்குரிய பாடல்களாகவும் வாழ்த்தாகவும் நூலின் மூலத்திலுள்ள முப்பது பாடல்கள் உள்ளன. முப்பத்தி ஓராவது பாடலாகவுள்ள அகவலில் மொத்தம் 165 அடிகளும், இளந்தாரி துதியில் வாழ்த்துப் பாடல்கள் இரண்டும் அடங்கலாக மொத்தம் பதின்மூன்று பாடல்களும் (32-44) உள்ளன.

**தூது நூலின் மூலம்:**

இப் பகுதியிலுள்ள பாடல்களில் வரும் குறிப்புக்கள் பாடுபவர்களுடைய மனத்திலும், வாசிப்பவர்களுடைய எண்ணத்திலும் பல உருக்களைப் புலப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறான கருத்தாடல்களைக் கொண்ட இலக்கியங்களே ஒரு கலைப்படைப்புக்களின் அல்லது படிமங்களின் தோற்றத்திற்கு வித்திடுகின்றன. அவ்வாறு நோக்கும் போது இப்பகுதியில் பல செய்திகள் காணப்பட்டாலும், கடவுளர்கள், அரசாட்சி அம்சங்கள், இசைக் கருவிகள் ஆகியவற்றுடன் இணைந்த குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**சிவபெருமாவன்**

1. உமாதேவியாரை ஒருபாகமாக வைத்த சிவபிரான்
2. புலித்தோல் உடையும் ஐந்து திருமுகங்களும் உள்ள சிவபிரான்
3. சந்திரனை அணிந்த சிவன்
4. உமையவளை இடப்பாகத்திலும், அபயவரத கரங்களை இருபுறத்திலும் கங்கையைச் சடையிலும் கொண்டு ஒரு காலில் நின்று நடமாடும் சிவனார்
5. இடபத்தை ஊர்தியாக உள்ள சிவனார்

**உமை**

1. சாமுண்டி, சிங்காரி, ஐயை, முக்கட்தேவி, கௌரி, திரிசூலி, அந்தரி, குமரி, எண்டோளி, கங்காளி, வேதாளி, புண்டரிகவதனி, கனதனத்தி, மாதங்கி, நீலி, கன்னி, சூலி, மாவுதாரி, பரிபூரணி, உத்தமி, பைரவி, பத்திரகாளி.
2. சிவகாமி

3. திருப்பாதங்களில் சிலம்புகளை அணிந்த நாரணி
4. தரமரையில் வீற்றிருக்கும் திருமகள்
5. இலக்குமி

**விநாயகர்**

1. கொடிய கயமுகாசுரனை ஒரு தந்தத்தினாலே தண்டித்தவர்
2. உமாதேவியாரை ஒருபாகமாக வைத்த சிவபிரானின் புதல்வர்
3. யானை முகத்தினன்

**முருகன்**

1. சூரனின் மார்பை பிளந்த கூரிய வேலினையுடைய கந்தன்
2. ஆறுமுகப்பெருமான்
3. மயிலில் வரும் கந்தன்

**விஷ்ணு**

1. ஆதிசேடன் எனும் பாம்பின் மீது என்றும் பள்ளி கொள்ளும் திருமால்
2. திருமகள் தங்கும் மார்பும் ஒலிக்கும் சங்கேந்தும் கையும் உள்ள திருமால்
3. சங்கைக் கையில் வைத்திருக்கும் திருமால்

**கைலாயநாதன்**

1. செந்நிற மணிகளாலாய மாலையை அணிந்த மார்பன்
2. பச்சை நிறக் குவளை மலர் மாலை மார்பன்
3. மத்தகத்தையுடைய யானையின் பிடரியின் மீது கைலாயநாதகுமாரன்

**சந்திரமோகினி**

1. மிக்க அழகும் கூந்தலும் உள்ளவள்
2. இலக்குமியை ஒத்தவள்
3. மயில் போன்ற சாயனள்
4. கச்சு அணிந்த மார்பினள்
5. கண்களுக்கு மை தீட்டியிருந்தாள்
6. நெற்றியில் சந்திரப் பொட்டிருந்தாள்
7. முத்துப் போலப் பற்களையுடையவள்
8. இந்திராணி
9. கலைமகள்

**வைரவர்**

1. நாயை ஊர்தியாக உள்ளவர்
2. அண்ணமார்

**முனிவர், அசுரர், தேவர்:**

1. கஜமுகஅசுரன்
2. எண்திசை முனிவர்
3. முப்பத்துமுக்கோடிதேவர்
4. அத்திரி

**கட்டியக்காரன்**

1. கடுக்கன், கைச்சங்கிலி, சரப்பணி, சரிகைத் தலைப்பாகை அணிந்தவன்
2. அழகிய பிரம்பைக் கையிற் பிடித்தவன்

**இசை**

1. பெரிய முரசம்
2. தாளம்
3. குடம்
4. மேளம்
5. பல்லியங்கள்
6. முழவு

**நடனம்**

1. சிறுநகை புரியும் முகத்தினையுடைய மகளிர் நடனம்

**ஊர்வலம்: குளுப் படிமங்களின் தோற்றத்திற்குரிய பாடலுக்கு எடுத்துக்காட்டு:**

> "கைலாயநாத குமாரன் அழகிய அரச வீதியிலே ஊர்வலம் வருகிறான். அவன் ஆதிசேடன் என்னும் பாம்பின் மீது என்றும்; பள்ளி கொள்ளும் திருமாலை ஒத்த சிறப்பினன். இந்திர குமாரனைப் போல அழகுள்ளவன். இளந்தாரி என்னும் சிறப்புப் பெயரினன். விநாயகர், சிவகாமியம்மை, கந்தவேள், சிவன் ஆகிய கடவுளர் முறையே எலி, பொற்றேர், மயில், கேடகம் ஆகியவற்றில் வருகின்றனர். பூத கணங்கள் கூத்தாடுகின்றன. அவனது அதிகாரிகளான வன்னிய முதலிமார் குதிரைகளில் வருகின்றனர். எண்திசையிலும் அவனது ஆளுகைக்குட்பட்ட அரசர்கள், சிவிகைகளில் வருகின்றனர். கொங்கர், மகதர், கங்கர், சீனர், குடகர், கவுடர், வடுகர், மராடர், அங்கர், கௌசலர், தெலுங்கர், கருநடர், மாளவர் முதலிய நாட்டினரைப் பலமுறை பொருது அவர்களை வெற்றிகண்ட தோள் வலிமை உள்ளவன். வச்சிரம், எழு, வேல், அம்பு, சூ10லம், தண்டு, சக்கரம், ஈட்டி, சங்கம், வில், பணை முதலிய படைக்கலங்களை ஏந்திப் படைவீரர் வருகின்றனர். அரசகொடியை உயரப் பிடித்து யானைகளில் இருபக்கமும் அணிவகுத்து வன்னியமுதலிமார் வருகின்றனர். கங்கைக்குலத்தவனும் காரை ஊரினனும் சிங்கம் போன்றவனுமான காலிங்கராயனது மக்களும் இளந்தாரியினது தம்பிமாரும் ஆகிய அன்பும் வலிமையும் உள்ள கந்தவனம், சிதம்பரநாதன், சிதம்பரநம்பி என்பவர்கள் வலப்புறத்தில் வருகின்றனர். யாவரும் வாழ்த்தும்படியாக எங்கள் இளந்தாரி குமாரன் இணுவை நகர் வீதியில் வருகின்றார். தாளம்,

குடம், முழவு, மேளம், முதலிய பல்லியங்கள் ஒலிக்கின்றன. அழகிய மேழிக் கொடியைப் பலர் ஏந்தி வருகின்றனர். அண்ணமார் என்போர் தத்தம் குதிரைகளில் வருகின்றனர். பூமியைக் காக்கும் அரசவாள் அணிந்த அரசர்க்கரசன், உத்தமவீரன், வித்தைகள் யாவினும் வல்லவன் ஆகிய கைலாயகுமாரன் வருகின்றான்."

கைலாயநாதர் மெய்க்கீர்த்தி அகவல்:

இரண்டாவது பகுதியாகிய கைலாயநாதர் மெய்க்கீர்த்தி அகவலில் குளுப் படிமங்கள் அல்லது குளுச் சிற்பங்களுக்குரிய, சித்தரிக்கப்பட்ட பாடல்கள் மிக அழகாக உள்ளன.

எடுத்துக்காட்டு- கைலாயநாதன் அரசு வீற்றிருக்கும் சிறப்பு

"மககர் துலுக்கர் வடகர் குடகர்
சிங்கர் முதற்பல திக்குறு மிக்கவர்
தேடு நிதித்தொகை சீர்திக ழொத்தொளிர்
மாட முதற்கடை வாச லுற்றிட
மடமயி லொத்த மகளிர் பணைத்தெழு
குடமுலை யொத்ததெதிர் குமுற நடித்திட
ஆல மழுக்கதை யாதிய முத்தலை
வேல்கள் தரித்திடு வீரர்கள் சுற்றிடக்
கனக மழுத்திய கவிகை நிழற்றிட
வனமுலை மாதர்கள் வட்ட மசைத்திட
அருமுறை முனிவர்கள் ஆசிகள் கூறிடப்
பொருதிறல் வீரர் புடையெலாஞ் சூழ
அரியணை மிசையே அரசுவீற் றிருக்கும்
கருணைமா லான கயிலாய நாதன்"

இப் பாடலின் கருத்து:

"மகதர் துருக்கர் வடகர் குடகர் முதலிய பல திசைகளிலும் உள்ளவர்கள் மிக்க நிதிப்பொருள்களுடன் மாளிகையின் வாயிலில் காத்திருக்க, இளமயிலை ஒத்த சாயலினையுடைய மகளிர் அழகுடன் நடனமாட, ஆலம்-மழு-கதை-சூலம் முதலிய படைக்கருவிகள் ஏந்திய வீரர்கள் வரிசையாக நிற்க, பொன்பதித்த குடை நிழல் செய்ய, அழகிய மகளிர் ஆலவட்டம் அசைக்க, மறைவல்ல முனிவர் வாழ்த்துரை கூற, வலிமை படைத்த வீரர் பக்கங்களிலே சூழ்ந்து நிற்க, சிங்காசனத்தில் கருணையுடன் திருமாலைப்போல வீற்றிருப்பான்."

இப்பாடல் மிக அழகாக எடுத்துரைப்பதால், கைலாயநாதன் சிங்காசனத்தில் கோலோச்சும் விதம் நிழல் போல் நிற்கின்றது. இதைப் போல இன்னும் பல காட்சிகள் கூறப்பட்டுள்ளன.

இறுதியாக, இளந்தாரி துதி:

கைலாயநாதக் கடவுளை மக்கள் துதிப்பதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

**முடிவுரை**

இச்சிற்றிலக்கியம் ஒரு சிறிய ஊரை அண்டிய பிரதேசத்தை ஆண்ட தமிழ் அரசனது நல்லாட்சித்திறன், மக்களுக்கும் அரசனுக்கும் இடையில் இருந்த நல்லுறவு ஆகியவற்றைத் தெளிவாகப் பறைசாற்றுகின்றது. மனிதப் பிறவியாக இருந்த ஒரு அரசன் மக்களை நல்வழிப்படுத்தி, இறுதியில் இளந்தாரியாகவே (இளைஞன்) விண்ணுலகம் எய்தினான். இந்நிகழ்வு ஈற்றில்,பண்டைக் காலம்முதல் தமிழகத்தில் இருந்து வருகின்ற மிக எளிமையான நடுகல் வழிபாட்டுமுறை யாழ்ப்பாணத்திலே தோன்றுவதற்கு வழிசமைத்தது. அத்துடன், இவ் இலக்கியப் பாடல்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குரிய பண்பாட்டுக் குறிப்புகளையும், வரலாற்றுச் செய்திகளையும் பல இந்துசமயக் கடவுளர்கள் பற்றிய செய்திகளையும் இசைக்கருவிகள் பற்றிய குறிப்புக்களையும் புலப்படுத்துகின்றன. பன்னிரு திருமுறையில் தேவாரப் பாடலகள் எவ்வாறு சிவனின் பல்வேறு கோலங்களை வெளிப்படுத்துகின்றனவோ அவ்வாறே, இத்தூதுப் பாடல்களும் பல கடவுளரின் கோலங்களையும் இசைச் செய்திகளையும் வேறு பல அம்சங்களையும் வெளிப்படுத்துகின்றன. ஆகவே, இவ்வாறான இலக்கியங்களில் வருகின்ற குறிப்புக்களை மையப்படுத்தி உருவாக்கப்படும் சிற்பங்கள்,கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மக்களிடையே எடுத்துச்செல்வதற்கு உதவுகின்றன என்பது தெளிவாகின்றது. முடிவாக, அற்புதங்கள் அல்லது நிகழ்வுகள் இல்லாமல் இலக்கியமும். இலக்கியம் இல்லாமல் சிற்பங்களும் தோன்ற முடியாது.

துணை நூற் பட்டியல்

கந்தசுவாமி.க.இ.க, (2006), இணுவை சின்னத்தம்பிப்புலவர் அருளிய பஞ்சவன்னத்தூது , மணிமேகலைப்பிரசுரம்